<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | மாதையன் | நாள் | 31.01.2024 |
| தகப்பனார் பெயர் | ராமசாமி | | |

**<u>1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) இவ்வழக்கை மொத்தம் 20 நபர்கள் சேர்ந்து பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். எந்த சர்வே எண்ணிற்கு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், சர்வே எண்.65/10, பட்டா எண்.304 ல் உள்ள 0.92 சென்ட் நிலத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கில் 1 ம் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என கேட்டு தெரிந்து கொண்டோமா என்றால், இல்லை.

2) 1 ம் பிரதிவாதியால் தாவா சொத்து குறித்து எங்களுக்கெதிராக அ.வ.எண்.183/2013 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் கடந்த 31.01.2014 ம் தேதியில் 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பை ரத்து செய்ய மனுதாக்கல் செய்தததில் காலதாமதம் ஏற்பட்டதால் அதை மன்னிக்க கோரி இந்நீதிமன்றத்தில் எங்களால் காலவரையறை சட்டம் பிரிவு–5 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. நானும் மேற்படி மனுவில் தரப்பினர் என்றாலும், இவ்வழக்கிற்காக எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

3) இவ்வழக்கிலுள்ள சர்வே எண்.65/10 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றாலும், அதிலுள்ள 0.92 சென்ட் நிலத்தில், கடந்த 04.05.1954 ம் வருடத்தில் 1 ம் பிரதிவாதியின் தாயார் சின்னு (எ) சின்னம்மாள் என்பவரால் 0.46 சென்ட் நிலம் கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. கடந்த 1973 ம் வருடமே சர்வே எண்.65/10 ஆனது, மேற்படி சர்வே எண்.65/10C2, சர்வே எண்.65/10C, சர்வே எண்.65/10A என உட்பிரிவுகள் செய்யப்பட்டுவிட்டது என்றால், அவ்வாறு எந்த

உட்பிரிவும் ஆகவில்லை.

4) கந்தப்ப கவுண்டர் என்பது என் பாட்டனார். பழனியம்மாள் என்பது என் பாட்டி. மேற்படி நபர்களுக்கு ராமசாமி, ஏழுமலை என இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். கடந்த 1954 ம் வருடத்திலேயே 0.92 சென்ட் நிலத்தில் 0.46 சென்ட் நிலம் கிரயம் கொடுக்கப்பட்டுவிட்ட நிலையில், மேற்படி 0.92 சென்ட் நிலத்தையும் பொறுத்து உரிமைகோரி வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால், சரியல்ல.

5) 1954 ம் வருடத்தில் மேற்படி கந்தப்ப கவுண்டரும், அவரது மனைவி பழனியம்மாளும் 1 ம் பிரதிவாதியின் தாயார் சின்னம்மாளுக்கு கிரயம் கொடுத்ததின் அடிப்படையில், மேற்படி சின்னம்மாளின் அனுபவத்தின் பேரில் அவரது அனுபவத்தில் உள்ள நிலத்திற்கு வருவாய் துறையினரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், அது தவறான பட்டா ஆகும்.

6) 1973 ம் வருடத்திலேயே 1 ம் பிரதிவாதியின் பெயரில் 0.46 சென்ட் நிலத்திற்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது வரை மேற்படி பட்டா குறித்து நாங்கள் ஆட்சேபிக்காமல், தவறாக வழக்காடிவருகிறோம் என்றால், சரியல்ல. மேற்படி சங்கதிகளை தெரிவித்து 1 ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி பட்டாவை ரத்து செய்யக்கோரியோ, அல்லது மேற்படி 0.46 சென்ட் நிலத்தை சொத்து விவரத்திலிருந்து நீக்கவோ அல்லது 1 ம் பிரதிவாதியின் தாயார் சின்னம்மாள் பெயரிலுள்ள கிரய பத்திரத்தை ரத்து செய்யகோரியோ இவ்வழக்கில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரியல்ல.

7) ஏற்கனவே வா.சா.1 ஆக சாட்சியளித்த 19 ம் வாதி வெங்கடாஜலம் மேற்படி சங்கதிகளை ஒப்புக்கொண்டதால், அதனை மறுக்கவேண்டி தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கடந்த 1954 ம் வருடத்தில் 1 ம் பிரதிவாதியின் தாயார் சின்னம்மாளின் பெயரில் கிரயம் ஆகியுள்ள நிலையில், நாங்கள் 1973 ம்

வருடத்திலிருந்து வில்லங்க சான்றிதழ்களை தாக்கல் செய்து அவ்வாறு கிரயம் ஆகவில்லை என வாதிட்டு வருகிறோம் என்றால், சரியல்ல.

8) இவ்வழக்கில் என்னென்ன ஆவணங்கள் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கூற இயலுமா என்றால், இயலாது. 1ம் பிரதிவாதியின் தாயார் பெயரிலுள்ள கிரய ஆவணம் வில்லங்க பதிவுகளில் வருகிறது என்றாலும், அதை பிரதிவாதிகள் தரப்பில் ஒப்படைத்துள்ளார்கள் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடமான மீட்பு இரசீதில் 1ம் பிரதிவாதி மாதையன் சர்வே எண்.65/10ல் 0.09 சென்ட் நிலத்தை என் தந்தை ராமசாமியிடம் அடமானம் வைத்து மீட்டதாக உள்ளது என்றால், சரிதான்.

9) கடந்த 1954ம் வருடத்திலேயே 1ம் பிரதிவாதியின் தாயார் சின்னம்மாள் பெயரில் கிரயம் ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள அனைத்து வில்லங்க சான்றிதழ்களும் மேற்படி தேதிக்கு பின்னிட்டவை என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 கடிதம் இவ்வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.10 அ–பதிவேட்டிலேயே 1ம் பிரதிவாதி மாதையனின் பெயர் சர்வே எண்.65/10A, சர்வே எண்.65/10C ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

10) வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணத்திலிருந்தே 1ம் பிரதிவாதிக்கு மேற்படி சர்வே எண்.65/10A, சர்வே எண்.65/10C ல் உள்ள சொத்துக்களில் உரிமை உள்ளது என்பது தெளிவாகிறது என்றால், சரியல்ல. பட்டாவை வைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

11) வாதிகள் மேற்படி சங்கதிகள் அனைத்தையும் முன்னரே தெரிந்து கொண்டு தற்போது காலதாமதமாக பிரதிவாதிகளின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால்,

வாதிகளின் இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படுகிறது என்றால், சரியல்ல.

12) நாங்களே கிரயம் கொடுத்துவிட்டு, அதை மறைத்து 1ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் மீது சுமார் 60 வருடங்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

(6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.4 ன் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மேட்டூர்.